# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 27 வியாழக்கிழமை 11.07.2024 கதிர் 297







# தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை! ஒக்டோபர் 5 அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி நாடளுமன்றில் தெரிவிப்பு



**தேர்தலைப்பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்திற்குக் கிடையாது எனவும், ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும், எனவும் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.**

**நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.** 2➤

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள புகையிரத ஊழியர்களுக்கு ராஜினாமா கடிதங்கள் தயார்!

### அமைச்சர் பந்துல குணவர்தன அறிவிப்பு



பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள புகையிரத நிலைய அதிபர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் உட்பட சுமார் ஆயிரம் ரயில்வே ஊழியர்கள் பதவி விலகியவர்களாகக் கருதி அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள ரயில் நிலைய அதிபர்களுக்கு ரயில்வே பொது முகாமையாளரால் 2➤

## சவால்களை கண்டு நாம் பயந்து ஓடப்போவதில்லை சதி வேலை காரணமாகவே ஆட்சியை இழந்தோம்!

### எவராலும் தம்மை வெல்ல முடியாது என்கிறார் நாமல் எம்.பி.



எத்தகைய சவால்கள் வந்தாலும் கட்சியின் கொள்கைகளை மாற்றப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் முகாம் என்பது 'மஹிந்த சிந்தன'வின் ஊடாக கட்டியெழுப்பப்பட்ட ஓர் அரசியல் கட்சி என சுட்டிக்காட்டிய அவர், மஹிந்த ராஜபக்ஷ வின் தொலைநோக்குப் பார்வையுடன் கட்டமைக்கப்பட்ட அரசியல் கட்சியானது ஒரு போதும் சவால்களை கண்டு தப்பி ஓடாது எனவும், அவ்வாறே சவால்களுக்கு பயந்து எப்போதும் தமது கொள்கைகளை மாற்றிக்கொள்ளப் போவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட தெனியாய தொகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில் நாம் பாரிய சாதனைகளை புரிந்துள்ளோம். அவ்வாறே வெற்றிகளைப் போலவே, சவால்களையும் எதிர்கொண்டோம். எவராலும் வெல்ல முடியாத ஓர் கட்சியை நாங்கள் கொண்டுள்ளோம். சில காலங்களுக்கு முன்னர், சில சதி வேலைகளாலேயே 2➤

## ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்தவை சட்டமா அதிபராக நியமிக்க அனுமதி

### அரசமைப்புப் பேரவையின் முடிவை அறிவித்தார் சபாநாயகர்



ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்கவை சட்டமா அதிபராக நியமிப்பதற்கு அரசமைப்புப் பேரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

சபாநாயகரின் தலைமையில் அரசமைப்புப் பேரவை இன்று கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2➤

## வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத நிறைவேற்று பிரிவை சேராத அதிகாரிகளுக்கு சம்பள உயர்வை வழங்குவதற்கு தீர்மானம்

### ஜனாதிபதியின் பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி

நாட்டின் பொருளாதார நிலையை சரியாக புரிந்து கொண்டு, மக்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் செயல்பட்டு ஜூலை 8 மற்றும் 9 ஆகிய இரு நாட்களிலும் பணிபுரிந்த நிறைவேற்று சேவைப் பிரிவைச் சேராத அனைத்து அரச அதிகாரிகளுக்கும் விசேட சம்பள உயர்வை வழங்கி அவர்கள் அனைவருக்கும் எதிர்கால பதவி உயர்வுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் விசேட பாராட்டுச் சான்றிதழை வழங்குவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்கள் ஆகியோரை தெளிவுபடுத்துமாறும் அது தொடர்பான சுற்றறிக்கைகளை வெளியிடவும் பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அரச சேவையின் நிறைவேற்று பிரிவை சேராத சில சேவைகளை கொண்ட தொழிற்சங்கங்கள் ஜூலை 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் சுகயீன விடுமுறை மற்றும் வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரஜ-25)

# மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினம் பிரேரணை மீது சபையில் நாளை விவாதம்

மலையகத் தொழிற்சங்கத் தியாகிகளை நினைவுகூருவதற்குத் தினமொன்றைப் பிரகடனப்படுத்தக் கோரி நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரால் முன்வைக்கப்பட்டுள்ள குறித்த பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் நாளை வெள்ளிக்கிழமை விவாதம் நடைபெறவுள்ளது.

ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத 2➤

## பணிப்புறக்கணிப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

இதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில் நிலைய அதிபர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் கோரிக்கைகள் நிறைவேறும்வரை தொடரும் என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஒடுக்குமுறை மூலம் தொழிற்சங்கங்களை கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சித்தால், ஒட்டுமொத்த ரயில்வே சேவையின் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து போராட ஒருபோதும் தயங்காது என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ரயில்வே ஊழியர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மோசமாகச் செயற்படமாட்டார்கள் எனவும், தமது கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என நம்புவதாகவும் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி நள்ளிரவு முதல் ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வேலை நிறுத்தம் காரணமாக நேற்று பல ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டதோடு ஒரு சில ரயில்கள் மட்டும் இயக்கப்பட்டதால் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர்.

அதேநேரம், பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்ட போதிலும், நேற்றைய தினம் சுமார் 70 ரயில் சேவைகள் இயக்கப்பட்டதாக ரயில்வே பதில் முகாமையாளர் எஸ்.எஸ்.முதலிகே குறிப்பிட்டார்.

அதுமட்டுமல்லாமல், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளும் பயணிகளின் தேவைக்கு ஏற்ப இயக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (04)

## தேர்தலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் ஆகியன குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிச்சயமாக நடைபெறும் என்பதை ஜனாதிபதி தொடர்ச்சியாக வலியுறுத்தியிருந்தார்.

இதன் பிரகாரம் முதலாவதாக ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். தேர்தல் செலவினங்களுக்காக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில், ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும்.

தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது. கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டை வீழ்ச்சிப்பாதையில் இருந்து மீட்டெடுக்க ஜனாதிபதி மேற்கொண்ட வேலைத்திட்டங்களை மக்கள் நன்கு அறிவார்கள்.

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் தேர்தலுக்குத் தயாராகவே உள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்பதே நாட்டுமக்களின் எதிர்ப்பார்ப்பாகும், என்று அமைச்சர் அலிசப்ரி குறிப்பிட்டார். (04)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்புப் பேரவையின் தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க, அண்மையில் பதில் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## சவால்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எங்கள் அரசாங்கம் வீழ்ச்சி கண்டது. சவால்களுக்கு பயந்து நமது அரசியல் சிந்தனைகளை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. அத்தகைய அடித்தளத்தை கொண்டது தான் நமது கட்சி. இந்த நாட்டின் கிராமங்களை பலப்படுத்துவதில் நாங்கள் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதற்கான உரிய மாற்றங்களை நாம் அன்று கற்றுக் கொடுத்திருந்தோம். துரதிர்ஷ்டவசமாக 2015 க்குப் பின்னர் வந்த நமது அரசாங்கங்களால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலும், கிராமப்புற பிள்ளைகளை உலகளாவிய தொழில் சந்தைக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டிய அவசியத்தை அவர்கள் உணரவில்லை. கிராமங்களில் ஆலயங்கள், வீதிகள், கோயில்களை நாம் கட்டும்போது ஏற்பட்ட சமூக மாற்றங்களை கண்டு அவர்கள் சந்தேகக் கண் கொண்டே எம்மை பார்த்தார்கள்" - என்றார். (ரெஜ-29)

## மலையக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிற்சங்க தியாகிகள் தினமாகப் பிரகடனப்படுத்துமாறு வேலுகுமார் எம்.பி. கோரிக்கை முன்வைக்கவுள்ளார்.

மலையகத் தொழிற்சங்கத் தியாகிகளை நினைவுகூருவதற்கு அரச அங்கீகாரத்துடன் தினமொன்று அவசியம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தாலும் பல வருடங்களாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே வேலுகுமார் எம்.பியால் இது தனிநபர் பிரேரணையாக சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது. (05)



# சட்டத்தரணி கிரிஷ்மால் சஜித் அணியில் இணைவு

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளரும், 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சட்டத்தரணி கிருஷ்மால் வர்ணசூரிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

சட்டத்தரணி கிரிஷ்மால் வர்ணசூரிய இலங்கை, ஹேக் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் 24 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டவராவார்.

நாட்டின் 10 சிறந்த இளம் ஆளுமைகளில் ஒருவராகவும் அவர் பெயரிடப்பட்டிருந்தார்.

இந்நாட்டில் திறமையான சட்டத்தரணிகளில் ஒருவராக திகழ்ந்து வரும் அவர், சட்டத்துறையில் பரந்துபட்ட அறிவைக் கொண்டுள்ளதன் காரணமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நன்மதிப்பை பெற்ற ஒருவராகவும் திகழ்ந்து வருகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# கிளப் வசந்தவின் கொலை விசாரணை சந்தேக நபர்களுக்கு விசேட பாதுகாப்பு!

## நீதிமன்றம் பொலிசாருக்கு உத்தரவு

*கிளப் வசந்த என்ற சுரேந்திர வசந்த பெரேராவின் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பச்சை குத்தும் நிலையத்தின் உரிமையாளர், நீதவான் முன்னிலையில் இரகசிய வாக்குமூலமொன்றை வழங்க அனுமதி கோரியுள்ளார்.*

*அவர் உள்ளிட்ட சந்தேகநபர்கள் 7 பேரும் கடுவலை நீதவான் நீதிமன்றில் நேற்று (10) ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த அனுமதி கோரப்பட்டுள்ளது. எனினும் மீண்டும் ஒருமுறை சிந்தித்து இந்தக் கோரிக்கையை விடுக்குமாறு நீதவான் இதன்போது கூறியுள்ளார்.*

*இதேவேளை, சந்தேகநபர்களை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்காக பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*ஆனால், அதற்கு அனுமதியளிக்காத நீதிமன்றம், சந்தேக நபர்களை ஜூலை 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.*

*அத்துடன், இந்தக் கொலையோடு சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் லெக்கு பெட்டி என்ற நபரின் கூட்டாளிகள் சிறையில் இருப்பதால் சந்தேக நபர்களுக்கு விசேட பாதுகாப்பை வழங்குமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*(05)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கார்மேல் பற்றிமாவில் ஆசிரியர்களுக்கு நன்றி கூறிக் கௌரவித்த மாணவர்கள்






(வி.ரி.சகாதேவராஜா )

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் க.பொ.த உயர்தர பரீட்சைக்குத்தோற்றி 2022 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் அக்கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்களை பாராட்டிக் கௌரவித்தனர்.

குறித்த மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட "சாதனையாளர்களை கௌரவித்தல்" என்ற நிகழ்வு கடந்த சனிக்கிழமை கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ.ரெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது.

பற்றிமா கல்லூரியின் பழைய மாணவியும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் அக்கல்லூரியின் பழைய மாணவர்களான டொக்டர் மஹாலிங்கம் லட்சியன், பொறியியலாளர் எம்.கிரிதரன், சட்டத்தரணி ரவீந்திரன் சுஜீதா ஆகியோர் நட்சத்திர அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கல்லூரி பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பெருந்திரளானோர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்பித்த மற்றும் வழிகாட்டிய அதிபர் ஆசிரியர்கள் அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இந்நிகழ்வின் போது அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

# வவுனியா மாவட்டத்தில் கராத்தே ஐந்தாவது தரப்படுத்தல் பரீட்சை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஐ.எம்.ஏ.இலங்கை கிளையின் வவுனியா மாவட்ட பயிற்சி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்பு ஐந்தாவது தரப்படுத்தல் பரீட்சை வவுனியா மாவட்ட ஐ.எம்.ஏ.தலைவர் பி. மிதுசன் ஏற்பாட்டிலும், ஐ.எம்.ஏ.வவுனியா மாவட்ட செயலாளர் பீ. ஆகாசின் நெறிப்படுத்தலிலும் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் (9) நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக் கழக உடற்கல்வித்துறை பொறுப்பாளர் முஹம்மது இக்பாலின் பங்குபற்றுதலோடு இடம்பெற்ற கராத்தே பயிற்சி மற்றும் தரப்படுத்தல் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தின் பல பிரதேசங்களிலுமிருந்து போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.






# மக்கள் பங்களிப்புடனான கிராமிய அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் 10 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மல்வத்தை-03 (மஜீட்புரம்) கிராமத்தில் விவசாய உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார மேம்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த நிதியினை பெற்றுக் கொள்ளுவதற்காக மக்கள் பங்களிப்புடனான கிராம அபிவிருத்தி திட்டமொன்றை கிராம மக்களிடம் நேரடியாக கேட்டறிந்து கொள்ளுவதற்கான செயற்பாட்டு திட்டம் தயாரிக்கும் நிகழ்வு நேற்றையதினம் மல்வத்தை-03, பல்தேவைக் கட்டிடத்தில் கிராம சேவகர் எம்.ஐ சப்றாஜ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பி.எம் யாஸீர் ஆகியோரின் ஒழுங்கமைப்பின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு மக்கள் பங்களிப்புடனான கிராமிய வளத்திட்டத்தின் முக்கியத்துவம், அதன் நோக்கம் ஆகியவற்றை தெளிவுபடுத்தினார்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், கலந்துகொண்டதோடு விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பள்ளிவாசல் நிர்வாகிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் பங்குகொண்டனர்.

மக்கள் பங்களிப்புடனான இந்தக் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தை தயாரிக்கும் நிகழ்வின் பிரதம வளவாளராக அக்கரைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.ஜமாலி இணைந்துகொண்டு தெளிவூட்டியிருந்தார்.

# யூரோ கிண்ண கால்பந்தாட்ட இறுதிப்போட்டி ஸ்பெயின் – இங்கிலாந்து அணிகள் மோதல்!




யூரோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு, இவ்வருடத் தொடரில் விளையாடிய சகல போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஸ்பெயின் அணி தகுதி பெற்றுள்ளது.

கடந்த முறை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்த இங்கிலாந்து அணி இம்முறையும் இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளது. முதலாவது அரை இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி பிரான்ஸ் அணி அணியை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. பிரான்ஸ் அணி சார்பாக கோனா முனானி அடித்த கோல் மூலம் பிரான்ஸ் அணி முன்னிலை பெற்றது. 21 ஆவது நிமிடத்தில் யமால் அடித்த கோல் மூலம் ஸ்பெயின் அணி போட்டியைச் சமனிலைக்குக் கொண்டுவந்தது. ஆயினும், 4 நிமிட இடைவேளையில் ஒல்மோ ஸ்பெய்ன் அணிக்கான இரண்டாவது கோலை அடித்து வெற்றிவாய்ப்பை அதிகப்படுத்தினார்.

அதேவேளை, நெதர்லாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான அரை இறுதிப் போட்டியும் மிகவும் விறு விறுப்பாக இடம்பெற்றது. நெதர்லாந்து அணி சார்பாக சிமொன்ஸ் முதல் கோலை ஏழாவது நிமிடத்தில் அடித்தார். 21 ஆவது நிமிடத்தில் கிடைத்த பனால்டியை ஹரிக்கேன் கோலாக மாற்ற, கோல்கள் சமநிலையை அடைந்தன. இறுதிவரை கடும் விறு விறுப்பாக நடைபெற்ற போட்டியில் 91 ஆவது நிமிடத்தில் வட்கின்ஸ் இங்கிலாந்து அணிக்கான வெற்றி கோலை அடித்தார். ஸ்பெய்ன் அணி 1964, 2008, 2012 ஆம் ஆண்டுகளில் யூரோ கிண்ணத்தை வென்றுள்ளது. 1984 ஆம் ஆண்டு இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டது. இது அந்த அணிக்கு ஐந்தாவது யூரோ கிண்ண இறுதிப் போட்டியாகும். இம்முறை வெற்றி பெற்றால் அதிக கிண்ணத்தை வென்ற அணியாக ஸ்பெய்ன் அணி மாறும். தற்போது ஜேர்மனி, ஸ்பெய்ன் அணிகள் தலா மூன்று தடவைகள் வெற்றி பெற்றுள்ளன.

இங்கிலாந்து அணியின் இரண்டாவது யூரோ கிண்ண இறுதிப் போட்டி இது. இதுவரை கிண்ணத்தை அந்த அணி வென்றதில்லை. இங்கிலாந்து அணி முதல் சுற்றில் இரண்டு சமநிலை முடிவுகளைப் பெற்றிருந்தபோதிலும் தோல்விகளைச் சந்திக்கவில்லை.

இரு அணிகளும் விளையாடவுள்ள யூரோ கிண்ண இறுதிப்போட்டி வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## உக்ரைனுக்கு மேலதிக வான்பாதுகாப்பு உபகரணங்கள் நேட்டோ உறுப்பு நாடுகள் தொடர்ச்சியாக வழங்கும்

### அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உறுதி



உக்ரைனுக்கு மேலதிக வான்பாதுகாப்புத் உபகரணங்களை நேட்டோ உறுப்பு நாடுகள் அளிக்கும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உறுதி அளித்துள்ளார்.

உக்ரைனிலுள்ள குழந்தைகள் மருத்துவமனை உள்ளிட்ட பொதுமக்கள்பகுதிகளில்ரஷ்யா திங்கட்கிழமை நடத்திய தாக்குதலில் 38 பேர்உயிரிழந்த சூழலில், வொஷிங்டனில் நடைபெற்ற நேட்டோ மாநாட்டில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இது குறித்து மாநாட்டில் அவர் உரையாற்றியபோது, உக்ரைனுக்கு நேட்டோ உறுப்பு நாடுகள் கூடுதலாக 5 வான்பாதுகாப்பு உபகரணங்களை வழங்கும். அடுத்த ஆண்டில் கூடுதலாக நூற்றுக்கணக்கான இடைமறி ஏவுகணைத் தளவாடங்கள் உக்ரைனுக்குக் கிடைக்கும். ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல்களில் இருந்து உக்ரைன் நகரங்களையும் போர் முனைகளில் ரஷ்ய தாக்குதலை எதிர்நோக்கியுள்ள உக்ரைன் வீரர்களையும் பாதுகாப்பதற்காக இந்தத் தளவாடங்கள் அனுப்பப்படவுள்ளன.

உக்ரைன் மீது படையெடுப்பதற்கு முன்னர், இந்தப் போரால் நேட்டோ உடைந்துவிடும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் எதிர்பார்த்தார். ஆனால் அதற்குப் பதிலாக, முன்னெப்போதையும் விட நேட்டோ அமைப்பு அதிக பலம் வாய்ந்ததாக ஆகியிருக்கிறது.

போர் தொடங்குவதற்கு முன்னரும் உக்ரைன் சுதந்திர நாடாக இருந்தது. இப்போதும் சுதந்திர நாடாக இருக்கிறது. இனியும் அப்படித்தான் இருக்கும், என்றார் அவர்.

மாநாட்டில் பங்கேற்றுள்ள உக்ரைன் பிரதமர் வொலோடிமீர் ஸெலென்ஸ்கி பேசுகையில், 'அமெரிக்காவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலின் முடிவுகள் வெளியானதற்குப் பிறகு உக்ரைனுக்கு உதவியளிப்பது குறித்து முடிவடுக்கலாம் என்று அனைத்து நாடுகளும் கருதுகின்றன. உண்மையில் விளாடிமீர் புடினும் அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுத் திகதியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். எனவே, அனைத்து நாடுகளும் அந்த நிழலில் இருந்து வெளியேறி உறுதியான முடிவுகளை இப்போதே எடுக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

உக்ரைன் தலைநகர் கீவ், அந்த நாட்டு அதிபர் வொலோடிமீர் ஸெலென்ஸ்கியின் சொந்த ஊரான க்ரிவிரீ உள்ளிட்ட நகரங்களில் 40 க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி ரஷ்யா திங்கட்கிழமை தாக்குதல் நடத்தியதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

பெரும்பாலும், பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத நள்ளிரவில் மட்டுமே தாக்குதல் நடத்தும் ரஷ்யா, மிகவும் அரிதான வகையில் இந்த ஏவுகணைத் தாக்குதலை பட்டப்பகலில் நடத்தியது. இதில் 38 பேர் உயிரிழந்து, ஏராளமான பொதுமக்கள் காயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன. இந்தத் தாக்குதலில் கீவ் நகரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனை பலத்த சேதமடைந்தமை சர்வதேச அளவில் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இந்தச் சூழலில் வொஷிங்டனில் செவ்வாய்க்கிழமை தொடங்கி இன்று வியாழக்கிழமை நிறைவடையும் நேட்டோ மாநாட்டில் உக்ரைனுக்கு கூடுதல் வான்பாதுகாப்பு தளவாடங்கள் உள்ளிட்ட ஆயுதங்களை அனுப்புவதாக உறுப்பு நாடுகள் உறுதியளித்துள்ளன.

அமெரிக்காவில் அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை எதிர்த்து 81 வயது ஜோ பைடன் போட்டியிடுகிறார். அவர்கள் இருவருக்கும் இடையே கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற முதல் நேரடி விவாதத்தின்போது பைடன் மிக மோசமாகத் தடுமாறியதால் தேர்தலில் போட்டியிடுவதற்கான அவரது வயது மற்றும் உடல் தகுதி குறித்து சர்ச்சை எழுந்தது. அதிபர் போட்டியிலிருந்து பைடன் விலக வேண்டுமென்று அவரது ஜனநாயகக் கட்சியிலிருந்தே குரல்கள் எழுந்துள்ளன.

இந்தச் சூழலில், நேட்டோ அமைப்புக்கான அமெரிக்கத் தலைமையை உறுதி செய்யும் வகையில் உரையாற்றுவதன் மூலம் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் அதிபராகத் தொடரும் தகுதி தனக்கு இருப்பதை நிஷரூபிப்பதற்காகவே நேட்டோ மாநாட்டில் உக்ரைனுக்கு உறுதியான ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் ஜோ பைடன் பேசியதாகக் கூறப்படுகிறது. (04)



## எக்ஸ் சமூக வலைத்தளத்தில் ஒரு மாதத்தில் இந்தியாவில் 1,94,053 கணக்குகள் தடை!

*எலான் மஸ்க் நிர்வகிக்கும் எக்ஸ் சமூக வலைத்தளமானது (முன்னர் டுவிட்டர் என அறியப்பட்டது) இந்தியாவில் இவ்வருடம் மே 26 முதல் ஜூன் 25 ஆம் திகதிக்குள் 1,94,053 கணக்குகளை தடை செய்துள்ளது.*

*இந்த கணக்குகள் எக்ஸின் கொள்கைகளை மீறியதற்காக, குறிப்பாக குழந்தைகள் மீதான பாலியல் அத்துமீறல் மற்றும் அனுமதியில்லாத ஆபாசம் தொடர்பான உள்ளடக்கங்களை பகிர்ந்தமைக்காக தடை செய்யப்பட்டுள்ளன.*

*மேலும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் செயல்பட்ட 1,991 கணக்குகளும் எக்ஸ் தளத்தில் தடை செய்யப்பட்டுள்ளன.*

*ஒட்டுமொத்தமாக இந்த காலகட்டத்தில் 1,96,044 கணக்குகளுக்கு தடை விதித்ததாக எக்ஸ் தெரிவித்துள்ளது.*

*புதிய தகவல்தொழில்நுட்ப விதிகள், 2021 இன்படி எக்ஸ் பயனர்களிடமிருந்து 12,570 புகார்களை ஒரு மாதத்துக்குள் பெற்றுள்ளது. மேலும், கணக்குகள் முடக்கம் தொடர்பான மேல்முறையீடாக 55 புகார்கள் வந்துள்ளன. அவற்றில் 4 கணக்குகளை மீண்டும் இயங்க அனுமதித்துள்ள எக்ஸ் மீதியுள்ள கணக்குகளின் முடக்கம் தொடருமென தெரிவித்துள்ளது.*

*பெரும்பாலான புகார்கள், தடை மீறல் (5,289), பாலியல் உள்ளடக்கம் (2,768), வெறுப்பு நடவடிக்கை (2,196) மற்றும் வன்கொடுமை அல்லது தீண்டல் (1,243) ஆகிய பிரிவுகளில் இந்தியாவிலிருந்து பெறப்பட்டதாக எக்ஸ் தெரிக்கிறது.*

*முந்தைய மாதத்தில் தடை செய்யப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 2,29,925 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)*

# கல்முனை சாஹிராவில் வகுப்பறைக் கட்டிடம் கேட்போர் கூடத்துக்கு அடிக்கல் நாட்டல் நிகழ்வு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் முக்கிய தேவைப்பாடாக இருந்த மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடம் மற்றும் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, வேலைத்திட்டமும் இன்று ஆரம்பம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் பவள விழாவை சிறப்பிக்கும் முகமாக திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியினால், இந்நிர்மாணப் பணிக்காக 115 மில்லியன் ஷரூபாய் ஒதுக்கப்பட்டு, முதற் கட்டமாக 60 மில்லியன் ஷரூபாய்க்கான வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலை வருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார்.

இந் நிகழ்வில் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்ரம கலந்து கொண்டதோடு, கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். ச/ஹதுல் நஜீம், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், அம்பாறை மாவட்ட பொறியியலாளர் எம்.ஏ.எம்.சாஹிர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் மற்றும் பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர், பழைய மாணவர் சங்க செயலாளர், முன்னாள் அதிபர்கள் மற்றும் இதர பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலையின் ஆசிரிய, ஆசிரியைகள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் என பலதரப்பட்டோரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

## 48 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் வெள்ளிப் பதக்கம்

# நிந்தவூர் மதீனா விளையாட்டுக்கழக கபடி வீரர்களுக்குப் பாராட்டு நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை இணைந்து நடாத்தும் தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கபடி போட்டிகளில் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகவும் கிழக்கு மாகாணம் சார்பாக பங்கு பற்றிய நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகம் பதக்கம் பெற்றுள்ளது.

இச்சாதனையைக்கௌரவித்து இவ்வீரர்களுக்குச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கி வைக்கும் நிகழ்வானது நிந்தவூர் பிரதேச செயலகத்தின் செயலாளரும் சட்டத்தரணியுமான ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு வீரர்களை வாழ்த்தி உற்சாகப் படுத்தினர்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற போட்டிகளில் சப்ரகமுவ மற்றும் தென் மாகாண அணிகளை வீழ்த்தி இறுதிப்போட்டியில் வட மத்திய மாகாண அணிக்கு எதிராக 2 புள்ளிகள் வித்தியாசத்தில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றதன் மூலம் நிந்தவூர் பிரதேசத்திற்கு இவர்கள் பெருமை தேடித் தந்துள்ளனர்.




## பொத்துவில் பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளர் பதவியேற்பு



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலகத்தின்பதில்பிரதேச செயலாளராக சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எம். எம். ஆஷிக், நேற்று கடமையேற்றுக் கொண்டார்.

அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில் கௌரவிக்கப்பட்டதுடன், உதவிப் பிரதேச செயலாளர் எம். ராமக்குட்டி, கணக்காளர் எஸ்.எம். ஹாறுன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப். சப்ரி நிருவாக உத்தியோகத்தர் நிருவாக உத்தியோகத்தர் கிராம நிலதாரி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வாகன இறக்குமதி இவ்வருடத்தின் மூன்றாம் காலாண்டில் ஆரம்பமாகும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



எந்தவொரு பிரச்சினையும் ஏற்படாத வகையில் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் வாகன இறக்குமதியை இவ்வருடத்தின் மூன்றாம் காலாண்டில் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று (10) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கும்போது, "வாகன இறக்குமதி தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனும் இது குறித்து கலந்துரையாடியுள்ளதுடன், ஒகஸ்ட் மாதத்தின் பின்னர் குறிப்பிட்ட ஒரு ஒழுங்கமைப்பில் பொது போக்குவரத்து சேவைகள் மற்றும் பிற போக்குவரத்து சேவைகளுக்கு பயன்படுத்தப்படும் மாற்று வழிகள் குறித்து அவர்களுக்கு தெரிவித்துள்ளோம்.

தொடர்ந்து, சாதாரண வாகனங்களையும் அதற்கு அடுத்த கட்டமாக சொகுசு வாகனங்களையும் இறக்குமதி செய்வதற்கான ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஆராயும் குழு ஜுலை 4 ஆம் திகதி கூடியிருந்தது. இந்தக் குழு, ஒரு மாதத்திற்குள், அதாவது ஒகஸ்ட் இரண்டாவது வாரத்தில், அமைச்சரவைக்கு தமது அறிக்கையை சமர்ப்பிக்கும். அதன்படி, எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் விசேட ஏற்பாட்டின் கீழ் வாகனங்களின் இறக்குமதியை ஆரம்பிக்க முடியும் என நம்புகிறோம்" - எனக் குறிப்பிட்டார். (ரெஜ-30)

# கொழும்பு தேசிய நூலகத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது

கொழும்பு 07, டொரிங்டனில் அமைந்துள்ள தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபை கட்டடத்தின் தரைத்தளத்தில் உள்ள வாசகசாலைக்கு அண்மித்த இடத்தில் நேற்று (10) காலை ஏற்பட்ட தீ ஒரு மணித்தியாலத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டதாக கறுவாத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து ஏற்பட்டவுடன், நூலக நிர்வாகத்தினர் உடனடியாக பொலிஸாருக்கும், தீயணைப்பு துறையினருக்கும் தகவல் தெரிவித்தனர். அதன்படி கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான மூன்று தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு வந்து தீயை சுற்றியுள்ள கட்டடங்களுக்கு பரவாமல் தடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த தீ விபத்தில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை என குறிப்பிட்டுள்ள பொலிஸார், தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

(ரெஜ-31)










## பிங்கிரி கற்தூண் விகாரை அபிவிருத்தி ஆளுநர் நஸீர் அஹமட் நேரில் பார்வை

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் செவ்வாய்க்கிழமை (09) பிங்கிரிய கற்தூண் விகாரையின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்கான கண்காணிப்புச் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அசோகப் பேரரசின் போது இந்திய வணிகர்களால் இந்த விகாரை நிறுவப்பட்டது என்று புராண வரலாறுகள் மூலம் தெரிய வருகின்றது.

2300 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இந்த கோயில் இரண்டாம் பேதீஸ் மன்னரின் ஆட்சியின் போது மேம்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் எஞ்சியுள்ள 206 களிமண் கோயில்களில் களிமண் சுவர்களைக் கொண்ட மிகப் பெரிய கோயில் இதுவாகும்.

தற்போது, ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு விகாரைக்கு சொந்தமான நிலமானது, மன்னர் கால ஆட்சிகளின் போது தானமாக அளிக்கப்பட்டு, ஆங்கிலேயர் ஆட்சியின்போது 1864 ஆம் ஆண்டு குறித்த நிலங்களின் உரிமை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்டது.

தற்போது இந்த விகாரையின் பாதுகாப்பு, தொல்லியல் அகழ்வாராய்ச்சி பணிகள் நடைபெற்று வருவதுடன் , எதிர்காலத்தில் உள்ளூர் சுற்றுலா நடவடிக்கைகள், அருங்காட்சியகம் அமைக்கும் வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது தொடர்பில் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் நேரில் பார்வையிட்டதுடன், விகாரையின் வரலாறு மற்றும் அங்கு புதையுண்டு கிடக்கும் புராதன மதிப்புகள் தொடர்பான விடயங்கள் குறித்தும் விகாராதிபதி ராஜகீய பண்டித படிவெல சோரத தேரரிடம் கேட்டறிந்து கொண்டார்.

ஆலயத்தின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளுக்கு தனது பூரண ஆதரவை வழுங்குவதாகவும் ஆளுநர் அவர்கள் இதன்போது குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் இந்திய பௌத்த பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## ஜனசபா தேசிய வேலைத்திட்டம் பிரதிநிதிகளுக்கான தெளிவூட்டல்

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அரசாங்கத்தின் ஜனசபா தேசிய வேலைத்திட்டம் தொடர்பாக கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள சமூகமட்ட பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்கு கடந்த திங்கட்கிழமை (8) சம்மாந்துறை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் அவர்களின் ஒழுங்குபடுத்தலின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள சமூகமட்ட பிரதிநிதிகளின் பங்குபற்றலோடு இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம வளவாளராக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஸீக் கலந்து சமூகமட்ட பிரதிநிதிகளுக்கு ஜனசபா வேலைத்திட்டத்தின் நோக்கம், முக்கியத்துவம், மற்றும் இவ் வேலைத்திட்டம் தொடர்பாக சமூகமட்ட பிரதிநிதிகளின் செயற்பாடுகள் என்பவற்றை தெளிவுபடுத்தினார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2024 இல் வெளியிடப்பெற்றது.